## ***கொஹாகொட இறுதிக் கழிவகற்றல் நிலையத்தில் கழிவு முகாமைத்துவத்திற்காக அபிவிருத்தி முன்மொழிவுகளை கோருதல் ( EOI )***

அபிவிருத்தி மற்றும் நிர்வாக முன்மொழிவு - கொஹாகொட இறுதி திண்மக் கழிவகற்றும் நிலையம் ( கண்டி மாநகர சபைக்கு சொந்தமானது ).

கொஹாகொட இறுதித் திண்மக் கழிவகற்றும் நிலையத்தை அபிவிருத்தி செய்தல், நிர்வகித்தல் மற்றும் நிலையான முகாமைத்துவத்திற்காக தகுதி வாய்ந்த மற்றும் ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடமிருந்து கண்டி மாநகர சபை ( Kandy Municipal Council ) கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளைக் ( EOI ) கோருகின்றது .

அந்த முன்மொழிவுகள் சூழற் தோழமையுடைய மற்றும் சுகாதாரத்திற்கு உகந்த கழிவு முகாமைத்துவ தீர்வொன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுவதோடு முன்மொழியப்பட்ட திட்டத்தின் நன்மைகள் மற்றும் அதன் விளைவுகள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

### ***தற்போதைய நிலைமை :***

- முழு இடப் பிரமாணம் : 30 ஏக்கர் ( முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக அண்ணளவாக 3 இல் இருந்து 5 ஏக்கர்கள் வரை )
- தினசரி கழிவுகள் சேகரிப்பு செய்வது : மெட்ரிக் டொன் 80 – 100 .
- கழிவுகள் சேர்க்கை : அண்ணளவாக சேதன கழிவுகள் 70 % மும் அசேதன கழிவுகள் 30 % மும்.
- தற்போது 50 ஆண்டுகளுக்கு மேலாக கழிவுகள் அகற்றும் 03 நிலையங்கள் உள்ளதோடு அவற்றில் உள்ள கழிவுகளை திட்டத்திற்குப் பெற்றுக் கொள்ள முடியும் .
- மேலும் நகர எல்லைக்குள் கழிப்பறை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அண்ணளவாக ஒரு நாளைக்கு 5 கன மீட்டர் கழிப்பறைக் கழிவுகள் அகற்றுவதோடு அவற்றை ஏனைய திட்டங்களுக்கு வழங்குவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளது
- பயன்பாடுகள் : நிலத்தில் தற்போது முக் கட்ட மின்சாரம் இணைப்பொன்று உள்ளதோடு தேசிய நீர் வழங்கள் அதிகார சபையின் நீர் விநியோகமும் உள்ளது. மேலதிக இயற்கை தண்ணீர் வளத்தை அருகிலுள்ள உள்ள மகாவலி ஆற்றிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

### ***நோக்கம் :***

கண்டி மாநகர சபையின் நோக்கமாவது கொஹாகொட இறுதித் திண்மக் கழிவகற்றும் நிலையத்தை அபிவிருத்தி செய்தல், நிர்வகித்தல் மற்றும் நீண்டகால முகாமைத்துவத்திற்காக நிலைத்தன்மையுடனும், சுற்றுச்சூழலுக்கும் பொறுப்பானதுமாகவும் மற்றும் பொருளாதார ரீதியில் சாத்தியமானதுமான திட்டமிடலை நடைமுறைப்படுத்துவதே ஆகும். அபிவிருத்தி மற்றும் அது தொடர்புடைய அனைத்து அரசு விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணக்கமானதாக இருத்தல் வேண்டும் .

***முன்மொழிவுகளுக்கான அழைப்பு :***

முன்மொழிவுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் உள்ளடக்கப்படுதல் அவசியம் ஆகும்.

1. இடங்கள் கட்டுப்பாடு மற்றும் கழிவுகள் முகாமைத்துவத்திற்கு தொழில்நுட்ப அணுகுமுறை
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு படிமுறைகள்.
3. நிதி மற்றும் செயல்பாடுகளின் சாத்தியக்கூறு .
4. சட்டபூர்வமான மற்றும் செயற்பாட்டு நடைமுறைகளை கருத்திற்க் கொள்ளல்.
5. இலங்கையர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகள் ( வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்ட ஒரு உள்நாட்டு இணைந்த நிறுவனம் மூலம் செயற்படுதல் வேண்டும். )

***விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :***

• சமர்ப்பிக்கப்படும் அனைத்து முன்மொழிவுகளும் கண்டி மாநகர சபையின் மூலம் நியமனம் செய்யும் விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பாய்வு செய்து மதிப்பீடு செய்யப்படும்.

***முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட வேண்டிவைகள் :***

1. திட்டத்தின் கால எல்லை மற்றும் நடைமுறைப் படுத்தும் கால அட்டவணை
2. ஒப்படைக்கும் செயல்முறை மற்றும் செயற்பாட்டுத் திட்டம்
3. அரசாங்கத்திற்கு மற்றும் KMC ற்கு நன்மைகள் மற்றும் மதிப்பை சேர்த்தல்

அனைத்து முன்மொழிவுகளும் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த முன்மொழிவுகளை பதிவுத் தபாலில் , கூரியர் மூலம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு நேரில் சமர்ப்பிக்கலாம் . தபால் உறையின் மேல் இடது மூலையில் " ***கொஹாகொட இறுதிக் கழிவகற்றல் நிலையத்தில் கழிவு முகாமைத்துவத்திற்காக அபிவிருத்தி முன்மொழிவுகளை கோருதல்*** " என குறிப்பிடப்பட வேண்டும் .

நகர ஆணையாளர்,
மாநகர சபை .
கண்டி

திண்மக்கழிவு முகாமைத்துவப் பிரிவு - 0812 - 229936
வழங்கல் பிரிவு - 081 - 2232071

**முன்மொழிவுகள் கோரும் இறுதித் திகதி : 2026. 01. 09 – மு. ப 10. 00 மணி**

மேலதிக தகவல் அல்லது தற்போதைய இடங்களின் நிலைமையை பரிசீலனை செய்வதற்க்காக, ஆர்வமுள்ள தரப்பினருக்கு அலுவலக நேரங்களினுள் கண்டி மாநகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவப் பிரிவு அல்லது வழங்கல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.